ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2197/13 - 2020 ඔක්තෝබර් මස 13 වැනි අඟහරුවාදා - 2020.10.13

*2197/13 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின்கீழ் கொலன்னாவை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

கொலன்னாவை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, கட்சியின் உறுப்புரிமை இல்லாதொழிந்தமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின்கீழ், கொலன்னாவை நகர சபையின் 08 ஆம் இலக்க சாலமுல்ல வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட கலந்தர் மொஹிதீன் ராவுத்தர் நிஜாம்தீன் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின்கீழ் தகைமையற்றவரல்லாத வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்படவேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான கொலன்னாவை நகர சபையின் 08 ஆம் இலக்க சாலமுல்ல வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக வீரசிங்க ஆரச்சிகே தொன் ரெஜி என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்,

இப்போது கொலன்னாவை நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான வேவெல்ல ஹேவகே ரவிந்திர விஜய குமார ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) (அ) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு வீரசிங்க ஆரச்சிகே தொன் ரெஜி என்பவர் கொலன்னாவை நகர சபையின் 08 ஆம் இலக்க சாலமுல்ல வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**டபிள்யூ. எச். ஆர். விஜய குமார,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
கொலன்னாவை நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கொழும்பு,
2020, ஒற்றோபர் 13.